தினகரன்
செப்டம்பர் 23, 2024 திங்கட்கிழமை

# ஜிப்மரில் 2வது சுற்று எம்பிபிஎஸ் கலந்தாய்வு

## இன்று துவங்குகிறது

புதுச்சேரி, செப். 23: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவ கல்லூரியில் அகில இந்திய ஒதுக்கீடு-134, புதுவை ஒதுக்கீடு-48 என 182 எம்பிபிஎஸ் இடங்கள் உள்ளன. இதேபோல், ஜிப்மர் காரைக்கால் கிளையில் அகில இந்திய ஒதுக்கீடு-45, புதுவை ஒதுக்கீடு-16 என 61 எம்பிபிஎஸ் இடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கு ஆண்டுதோறும் டெல்லியில் உள்ள மருத்துவ கலந்தாய்வு கவுன்சில் (எம்சிசி) மூலம் ஆன்லைன் வழியாக கலந்தாய்வு நடத்தப்படுகிறது.

இந்நிலையில் 2024-25ம் கல்வி ஆண்டுக்கான முதல் சுற்று கலந்தாய்வு கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்று முடிந்தது. இக்கலந்தாய்வு முடிவில் புதுச்சேரி ஜிப்மரில் உள்ள 182 இடங்களில் 169 இடங்கள் நிரம்பின. அகில இந்திய ஒதுக்கீடு-4, புதுவை ஒதுக்கீடு-8 என மொத்தம் 12 இடங்கள் காலியாக இருந்தது. இதேபோல், ஜிப்மர் காரைக்கால் கிளையில் உள்ள 61 இடங்களில் 22 இடங்கள் மட்டுமே நிரம்பின. அகில இந்திய ஒதுக்கீடு-33, புதுவை மாணவர்களுக்கான ஒதுக்கீடு-6 என மொத்தம் 39 இடங்கள் காலியாக இருந்தன.

தொடர்ந்து, காலியாக உள்ள எம்பிபிஎஸ் இடங்களை நிரப்புவதற்கான 2வது சுற்று சீட் ஒதுக்கீட்டிற்கு செப்.6ம் தேதி முதல் 16ம் தேதி வரை எம்சிசி இணையதளத்தில் ஆன்லைன் பதிவு நடைபெற்றது. இதில் பதிவு செய்தவர்களுக்கு கடந்த 17, 18 தேதிகளில் நீட் மதிப்பெண் மற்றும் இடஒதுக்கீடு அடிப்படையில் சீட் ஒதுக்கீடு செய்யும் பணிகள் நடந்தது. செப்.19ம் தேதி 2வது சுற்று சீட் ஒதுக்கீடு பட்டியல் வெளியிடப்பட்டது.

இதன் அடிப்படையில், புதுச்சேரி ஜிப்மரில் எம்பிபிஎஸ் சீட் ஒதுக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்தாய்வு ஜிப்மர் அகாடமிக் மையத்தில் இன்று துவங்குகிறது. இங்கு புதுவை மற்றும் அகில இந்திய ஒதுக்கீட்டில் சீட் ஒதுக்கப்பட்ட மாணவர்கள் இன்று (23ம் தேதி) முதல் 27ம் தேதி வரை தினமும் காலை 9 மணி முதல் 11 மணி வரை நடக்கிறது. இதேபோல், காரைக்கால் ஜிப்மரில் சீட் ஒதுக்கப்பட்டவர்களுக்கு வருகிற 25, 26 தேதிகளில் காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை காரைக்கால் கோவில்பத்து ஜிப்மர் அகாடமிக் வளாகத்தில் நடைபெறுகிறது.

இக்கலந்தாய்வுக்கு மாணவர்கள் உரிய நேரத்திற்குள் வர வேண்டும். வரும்போது மாணவர்கள் அடையாள சான்று, நீட் தேர்வுக்கான ஹால்டிக்கெட், தேர்வு முடிவு மற்றும் தரவரிசை கடிதம், தற்காலிக சீட் ஒதுக்கீடு கடிதம், பிறப்பு சான்றிதழ், 12ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், 12ம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழ், நடத்தை சான்றிதழ், குடியிருப்பு மற்றும் சாதி சான்றிதழ்களை கொண்டுவர வேண்டும் என ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.